# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*******

முறையீட்டு மனு எண்: 070/2019/பே
ஆணை நாள் 26–04–2019

திரு. வ.ராமதாஸ்,
த/பெ திரு ம.மு. வர்னாசுதன்,
7/22, அ.வல்லாளப்பட்டி,
மேலூர் வட்டம்,
மதுரை மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்.

1.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மதுரை மண்டலம்,
2.பேரூராட்சிகளின் இயக்குநர்,
சென்னை,
3.ஒப்பந்ததாரர்கள்,
4.செயல் அலுவலர்,
அ.வல்லாளப்பட்டி பேரூராட்சி. --- எதிர் மனுதாரர்கள்.

## ஆணை.

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், 4/22, அ.வல்லாளப்பட்டி பேரூராட்சியினைச் சேர்ந்த திரு.வ.ராமதாஸ், த/பெ திரு.ம.மு.வர்னசுதன், முறையீட்டு மனுதாரரின் 23.04.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.04.2019 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.070/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுவில் மதுரை மாவட்டம், அ.வல்லாளப்பட்டி பேரூராட்சியில் மத்திய மாநில மற்றும் பேரூராட்சி அரசு நிதி உதவி திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடப் பணிகள் கட்டுவதில் முறைகேடு எனத் தெரிவித்து எதிர் மனுதாரர்களாக பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டலம் ஒப்பந்ததாரர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களிடம் விசாரணை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2(11) ன் கீழ் "பொதுப்பணியாளர்" என்ற வரையறைக்குள் தலைவர் அல்லது துணைத் தலைவர், மேயர் அல்லது துணை மேயர் உள்ளடங்கிய உள்ளாட்சி அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட

உறுப்பினரொருவர் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை உள்ளடக்கியதாகும். எனவே மேற்படி வரையறைக்குள் தங்களின் முறையீட்டு மனுவில் எதிர் மனுதாரர்களாக குறிப்பிட்டுள்ள அலுவலர்கள் (பேரூராட்சிகளின் ஆணையர்/உதவி இயக்குநர்) மற்றும் ஒப்பந்ததாரர்கள் உட்படாததால், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (முறையீடுகள் தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் தீர்வு செய்தல்) விதிகள், விதி–8ன்படி சட்ட ஷரத்துக்கள் உட்படாததால் தங்களது முறையீட்டு மனு ஏற்கத் தக்கதல்ல எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

இருப்பினும், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (முறையீடுகள் தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் தீர்வு செய்தல்) விதிகள், விதி 8(2) ன்படி உரிய திருத்தங்கள் செய்து முறையீட்டு மனு உரிய ஆதார ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், மேற்படி விதிகளில், விதி.4–ன்படி புதிய மனுவாக பதிவு செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தும் அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்
திரு. வ.ராமதாஸ்,
த/பெ திரு ம.மு. வர்ணாகதன்,
7/22, அ.வல்லாளப்பட்டி,
மேலூர் வட்டம்,
மதுரை.மாவட்டம்.–635301

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள் பிரிவு)